1979 ஏப்ரல் 27]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக் கேள்வியை யொட்டிய துணைக் கேள்வியாக இருக்க வேண்டும் மற்ற வற்றுக்கு அமைச்சரிடத்தில் தகவல் இருக்காது.

வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு —ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

3. தகவல் கோரல்.

அ. ராஜாசுப்பிரமணியம் குழுவின் பரிந்துரைப்படி நெச வாளர்களுக்கு சட்டம் கொண்டு வருவது குறித்து.

திரு. ரா. உமாநாத் : இந்த அவை ஆரம்பத்திலே நெச வாளர்கள் மாநிலம் பூராவும் மறியல் செய்தபோது கனம் அமைச்சர் அவர்கள். ராஜா சுப்பிரமணியம் ரிப்போர்ட் அடிப் படையில் சட்டம் இண்ட்ரட்யூஸ் பண்ணப்படும் என்று சொன் னார்கள். நாளைக்கு சபை முடியப் போகிறது. இன்றுவரை மசோதா சர்குலேட் பண்ணப்படவில்லை. அமைச்சர் அவர்கள் தந்த வாக்குறுதியை நிறைவேற்றுவார்களா ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : ராஜா சுப்பிர மணியம் கமிட்டி அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு வரைவு மசோதா தயாரிக்கப்பட்டு மாண்புமிகு முதலமைச்சர் தொழிலாளர் நல அமைச்சர், பஞ்சாலைத்துறை அமைச்சர் ஒப்புதல் பெற்று உறுப்பினர்களுக்குக் கொடுப்பதற்காக அனுப் பப்பட்டிருக்கிறது. நாளைக்கு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் அதை மொழிவார்கள்.

ஆ. விவசாயிகள் கைது செய்யப் பெற்றுள்ளது குறித்து.

திரு. சோ. அழகர்சாமி : தொடர்ந்து விவசாயிகள் கிளர்ச்சியை ஒட்டி இப்போது பல இடங்களில போலீஸ் கைது செய்துகொண்டே இருப்பதாகத் தகவல வந்திருக்கிறது. இதுவரை எத்தனை இடங்களில் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் ? அமைச்சர் அவர்கள் அதுபற்றி 82-வது விதியின் கீழ் ஒரு அறிக்கை வைத்தால் பூராவுமாக அதைப்பற்றி உணர்ந்து கொள்ள முடியும்.

திரு. ஜே. ஜேம்ஸ் : விவசாயிகள் போராட்டம் சம்பந்தமாக கைது செய்யப்பட்டு........

[1979 ஏப்ரல் 27

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. அழகர்சாமி அதே பிரசசினையை எழுப்பிவிட்டார்கள், பிறகு ஒவ்வொருவரும் எழுந்து அதையே எழுப்பிக் கொண்டிருக்கக்கூடாது. ஒவ்வொரு வரையும் கேட்க அனுமதிக்கவும் முடியாது.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : நேற்றையதினம் எதிர் கட்சித் தலைவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க கடையடைப்புப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களைக்கூட மாண்புமிகு முதல்வர் அவர்கள் விடுதலை செய்ய ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். அரசைப் பொறுத்தவரை கைது செய்யப்பட்டவர்கள் விடுதலை செய்யப்படுவதாகத் தகவல் இருக்கிறதே தவிர, புதிதாகக் கைது செய்யப்படுவதாகத் தகவல் இல்லை. மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர்களுக்கு ஏதேனும் தந்திகளோ, மற்ற ஆதாரங்களோ கிடைத்திருக்குமானால் அதை அரசுக்குத் தந்தால் அதைப் பற்றி அரசு பரிசீலிக்கும்.

திரு. சோ. அழகர்சாமி : நேற்றே சொன்னேன். 24, 25 ஆம் தேதி கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். உடுமலைப் பேட்டை, ஆலங்குளம் போன்ற பகுதிகளில் கைது செய்யப் பட்டிருக்கிறார்கள்.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. அழகர்சாமி அவர்கள் இதை ஒரு பிரச்சினையாக ஆக்கி பேசிக் கொண்டே போகக்கூடாது. (குறுக்கீடு) முன்வரிசையில் இருப்பவர்கள் தான் இந்த நேரத்தில் ஏதாவது விளக்கம் பெற ஒழுங்குப் பிரச்சினை எழுப்பலாம். எல்லோரும் எழுந்து நின்றால் அனைவரையும் அனுமதிக்க முடியாது.

[முற்பகல் 9-50]

திரு. கரு. இராம. கரிய மாணிக்கம் அம்பலம் : என்றைக்காவது ஒரு நாள் நாங்கள் கேட்கக் கூடாதா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; அது, உங்கள் தலைவரைக் கேளுங்கள், அலுவல் ஆய்வுக் குழுவிலே உங்கள் தலைவரும் சேர்ந்து எடுத்த முடிவாகும் அது. என்னைக் கேட்காதீர்கள்.

**1979 ஏப்ரல் 27]**

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இன்றைய தினம் அவர்களுடைய தலைவர் இங்கே இல்லாததால் அவர்களில் யாராவது ஒருவர் எழுந்து கேட்கலாம்.

திரு. ரா. உமாநாத் : நீங்கள் சொன்ன புரசீஜர் பற்றி நான் எங்கள் பார்ட்டியைச் சேர்ந்தவர்களிடம் கேட்டேன். பி.ஏ.சி.-யிலே கிராண்ட்ஸ் டிஸ்கஷனுக்கு வருகிறபோதுதான் அப்படி என்று சொல்லப்பட்டது. அங்கே ஏற்பட்ட பேக்கேஜ் டீல் ஒரு நாளைக்கு ஒரு அட்ஜர்ன்மெண்ட் மோஷன் அனுமதிக்கப்பட வேண்டும் என்பதும் பிரண்ட் பெஞ்சிலே இருக்கிறவர்கள் ரெய்ஸ் பண்ணலாம் என்பதும் ஆகும், இப்போது எல்லாம் கிராண்ட்ஸ் டிஸ்கஷன் முடிந்துவிட்டது. ஆகவே அனுமதிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்படியில்லை, கேள்வி நேரம் முடிந்தபிறகு ஒழுங்குப் பிரச்சினைகள் என்று எல்லோரும் எழுப்புகிறார்கள். நேரம் அதிகமாகும் என்ற காரணத்தினால் முன் வரிசையிலே உள்ள கட்சித் தலைவர்கள் மட்டும் அதைக் கேட்கலாம் என்று முடிவு எடுக்கப்பட்டது.

திரு. ரா. உமாநாத் : இன்றைக்கு அது வராது.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, நான் அதை விளக்கிவிடுகிறேன். நம்முடைய நடைமுறை விதிகளில், கேள்வி நேரம் முடிந்த பிறகு ஒரு பிரச்சினையை எழுப்ப 'ஜீரோஹவர்' என்று இங்கே இல்லை. இருந்தாலும் சில பிரச்சினைகள் வருகின்றன. அதைப்பற்றி அலுவல் ஆய்வுக் குழுவிலே பேசியபோது 'ஜீரோ ஹவர்' என்று விதிகளிலே இடம் இல்லையென்றாலும் பொது முக்கியமான பிரச்சினைகள் குறித்து எதிர்கட்சித் தலைவர் அல்லது எதிர்கட்சிகளின் வரிசையிலே உள்ள தலைவர்கள் எழுந்து கேட்கலாம் என்று அன்று முடிவு செய்யப்பட்டது.

இன்னொன்றும் எனக்கு இப்போது ஞாபகத்திற்கு வருகிறது. எதிர்கட்சித் தலைவர் அன்றைய தினம், எதிர்கட்சித் தலைவருக்கு ஒருவருக்கு மட்டும் அப்படி அனுமதித்து வந்தோம், இருந்தாலும் பரவாயில்லை நடைமுறையிலே இப்போது அத்தனை பேரும் கேட்க வேண்டுமென்ற ஒரு சூழ்நிலை வந்துவிடுகிறது. எதிர்கட்சிகளில் உள்ள, முன் வரிசையிலே உள்ள தலைவர்கள் அது போன்ற பிரச்சினைகளை எழுப்பலாம் என்று அவரும் ஒத்துக் கொண்டார்கள். அது ஏதோ டிமான்ட்ஸ் நடக்கிற நேரத்திலேதான், மற்ற நேரங்களிலே இல்லை என்பது சரியல்ல.